சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :17.12.2024
வா.சா.1 – அழகர் S/o சுப்பிரமணியன்
O.S No.67/2022 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

பிரதிவாதி சௌந்திர பாண்டியனை எனக்கு முன்பாகவே தெரியும் அவர் எங்கள் ஊரைச்சார்ந்தவர். பணப்பிரச்சினை தொடர்பாக பிரதிவாதி என்னிடம் நேரடியாக பேசவில்லை என்றால் சரியல்ல. நேரடியாக என்னிடம் வந்து பேசினார். ரவி என்ற நபரை எனக்கும் தெரியும் பிரதிவாதி சௌந்திரபாண்டியனுக்கும் தெரியும். நான் சுமார் 17 ஆண்டுகளாக சிங்கப்பூரில் பணியாற்றி வந்தேன். 2018ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியா வந்தேன். கடந்த 17 ஆண்டுகளாக நானும், பிரதிவாதி சௌந்திரபாண்டியனும் பேச்சுவார்த்தையில் இருந்தோமா என்றால் நான் ஊருக்கு வரும் போதெல்லாம் சந்தித்தால் பேசுவோம். அவருடைய மகளும் என்னுடைய மகளும் வகுப்பு தோழிகள் ஆவர். வழக்கு சொத்திற்கான தான செட்டில்மெண்டை பிரதிவாதி சௌந்திரபாண்டியன் தான் என்னிடம் காட்டினார். அதற்கான ஒளிநகலை நான் பெற்றுக்கொண்டேன். சௌந்திரபாண்டியன், ரவி என்ற நபரிடம் வழக்கு சொத்தின் மீது கடன் வேண்டும் என்று ஒளிநகலை கொடுத்திருந்தார் என்றும், சொத்தை விற்பனை செய்வதற்காக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி 3 லட்சம் ரூபாய் கடன் என்னிடம் கேட்டார் என்றும், நான் கிரைய ஒப்பந்தம் பேசி 5 லட்சம் என்று குறிப்பிட்டு எழுதிக்கொடுத்தால் தான் கடன் கொடுப்பேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி என்னிடம் கடனிற்காக 3 லட்சம் தான் வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தமானது கடனிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணமே தவிர உண்மையில் வழக்கு சொத்தை விற்பனை செய்வதற்காக

ஏற்படுத்தப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் சாட்சிகளாக கையெழுத்திட்டுள்ள ரவி, மற்றும் பாண்டி ஆகியோரை விசாரித்தால் மட்டுமே பத்திரத்தின் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். 22.10.2019 அன்று வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். அதில் இருந்து 1 – ½ ஆண்டுகளுக்குள்ளாக மீதகிரைய தொகை கொடுக்கவேண்டும் என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 7 லட்சம் ரூபாய் கிரைய தொகை என்றும் முன்பணமாக 5 லட்சம் கொடுக்கப்பட்டதாக மீதமுள்ள 2 லட்சம் தொகையை கிரைய ஆவணம் எழுதும்போது செலுத்த வேண்டும் என்ற குறிப்புள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் பாக்கிகிரைய தொகையை செலுத்த தயாராக இருக்கிறேன் என்றோ, வழக்கு சொத்தை கிரையம்முடிக்க தயாராக இருக்கிறேன் என்றோ அறிவிப்பு எதுவும் பிரதிவாதிக்கு கொடுத்தேனா என்றால் அறிவிப்பு கொடுக்கவில்லை, நேரடியாக சென்று கேட்டேன். வழக்கு சொத்திற்கும் பிரதிவாதியின் தந்தைக்கும் தொடர்பு எதுவும் இருக்கிறதா என்றால் அவர் தான பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார். வேறு சம்பந்தமில்லை. 19.01.2022 அன்று பிரதிவாதி தான் முதலில் அறிவிப்பை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் கிரைய ஒப்பந்தமானது கடனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றும், கடன் தொகையான 3 லட்சம் ரூபாயை செலுத்திவிட்டதாகவும், ஆகவே பத்திரத்தின் அசலை கொடுக்கும்படி அதில் கேட்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். 22.04.2022லியே மீதத்தொகையான 17500ரூபாயை செலுத்தி பிரதிவாதி மொத்த கடன் தொகை செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னர், மீதகிரைய பாக்கிதொகையான 2 லட்சம் ரூபாயை செலுத்த தயாராக உள்ளேன் என்பதற்கு நீதிமன்றத்தில் ஏதும் வைப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை.

பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு ஆட்சேபணை தெரிவித்து கூடுதல் பதில்வழக்குரை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பலமுறை பத்திரம் முடித்துக்கொடுக்க கூப்பிட்ட போதெல்லாம் பிரதிவாதி அவருடைய தந்தைக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தை முன்வைத்து அவ்வப்போது காலங்கடத்தி வந்தார் என்பது பொய் என்றும், வழக்கு சொத்திற்கும் அவரது தந்தைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அதனால் அதில் இருந்தே நான் கூறுவது பொய் என்பது விளங்கும் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் வழக்கு சொத்தை பொறுத்து மேலும் கட்டிட வேலை செய்தார் என்றும், அதை எப்போது செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்கில் கிரைய முடித்து தர வேண்டும் என்றும், மாற்றுபரிகாரமாக கொடுத்த முன்பணத்தை திருப்பி செலுத்த வேண்டும் என்பதற்கு காரணம் வீடை பிரதிவாதி மாற்றி அமைத்துவிட்டார் என்ற காரணமானது வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய் என்றும், உண்மையில் பிரதிவாதியிடம் நான் கடன் தான் கொடுத்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. மாற்றுப்பரிகாரத்தை கேட்டதற்கான காரணமே பணம் கடன் வரவு, செலவு தொடர்பாக தான் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டதே தவிர சொத்து கிரையத்திற்காக ஏற்பட்டதானால் தான் மாற்றுபரிகாரத்தையே நான் கோரியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் கடனுக்கு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் தான் 1- ½ ஆண்டுக்குள்ளாக வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நம்பிக்கையின் அடிப்படையில் காத்திருந்தேன். பிரதிவாதியின் உடைய மகள் திருமணத்திற்காக கால அவகாசம் கோரியிருந்தார் என்று சாட்சி தாமாக முன்வந்து கூறுகிறார். 19.01.2022 காலையில் நான் கேட்ட போது தான் பிரதிவாதி மகளுக்கு திருமணம் இருப்பதாக கூறி காலஅவகாசம்

கேட்டிருந்தார். மேற்படி விபரத்தை எனது வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் நகலானது பிரதிவாதி என்னிடம் நேரடியாக கொடுத்த ஆவணம் அல்ல என்றும் அது ரவி கடனிற்காக பெற்றுக்கொடுத்த ஆவணம் என்றால் சரியல்ல. பிரதிவாதி மகளும், என்னுடைய மகளும் வகுப்பு தோழிகள் என்றும், பிரதிவாதியின் மகளின் கல்யாணத்திற்கு பிறகு சொத்தை கிரையம் முடித்துக்கொடுக்கிறேன் என்று கூறியதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் நேரடியாக சென்று பலமுறை பிரதிவாதியிடம் கிரையம் முடித்து கொடுக்க கேட்டிருந்தேன் என்பதற்கு சாட்சிகள் யாரும் இருக்கிறார்களா என்றால் இல்லை. எந்த தேதியில் சென்று கேட்டேன் என்று நினைவிருக்கிறதா என்றால் நினைவில்லை. கடனிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் தான் வா.சா.ஆ.1 ஆவணத்தை வைத்து நான் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றும், நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமானது கடனிற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு ஒப்புக்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணமே தவிர உண்மையில் அது கிரையம் முடிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. 3 லட்சம் ரூபாயில் முதல் மாத வட்டி 9000த்தை கழித்து கொண்டு மேலும் கமிஷன் தொகை பத்திரசெலவுக்காக 8500 ஆக மொத்தம் 17500 போக மீத தொகை 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மட்டுமே பிரதிவாதியிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 22.04.2022 வரை உள்ள 3 லட்சம் ரூபாய்க்கான வட்டி மற்றும் நிலுவை தொகை முழுவதுமாக பிரதிவாதி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. அதற்கான ரசீதை கேட்டார் என்றும் நான் தரமுடியாது என்று மறுத்துவிட்டேன் என்றால் பணமே செலுத்தவில்லை ரசீது எவ்வாறு கொடுக்கமுடியும். பணம்

சரியாக திருப்பி செலுத்திவிட்டதால் தான் அவர் மீது நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை என்றும், பிரதிவாதி அறிவிப்புக்கு பின்னர் நான் வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், கிரைய தொகை கொடுத்து கிரையம் முடிக்கும் எண்ணத்தில் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்படவில்லை என்றும், அதனால் வழக்கு சொத்தை பொறுத்து தடைஉத்தரவு பரிகாரமும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2024.12.17 17:34:10 +0530

Sub Judge
Melur